சுருக்கம்

மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் அரசுக்கு செலுத்த வேண்டிய நிலுவைக் கடன் தொகை மற்றும் வட்டித் தொகை ஆகியவற்றை தள்ளுபடி செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நதி.2) துறை

அரசாணை (நிலை) எண்.149 நாள்: 9.11.2007

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.120, ந.நி (ம) கு.வ. துறை, நாள் 10.7.1998
2. நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் ந.க.எண்.9404/2003/எல்3, நாள் 1.8.2007.

---

ஆணை:

முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் 1.4.98 வரையிலான மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கு வழங்கப்பட்ட கடன் நிலுவைகளில் தொகுக்கப்பட்ட மொத்தக்கடன் தொகை 13.5% ஆண்டு வட்டியுடன் 20 ஆண்டுகளில் அரையாண்டுத் தவணைகளில் திரும்பச் செலுத்தப்பட வேண்டும் என ஆணையிடப்பட்டது. 2007-2008ம் நிதியாண்டின் மானியக் கோரிக்கை எண்.34ன் மீதான விவாதத்தின்போது 12.4.2007 அன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் மாநகராட்சிகளும், நகராட்சிகளும் அரசுக்கு செலுத்த வேண்டிய நிலுவைக் கடன் தொகை மற்றும் வட்டியை தள்ளுபடி செய்வது தொடர்பாக கீழ்க்கண்டவாறு அறிவித்தார்.

"மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் அரசுக்கு செலுத்த வேண்டிய கடன் தொகை மாநகராட்சிகளுக்கும் மற்றும் நகராட்சிகளுக்கும் ஒரு மிகப் பெரிய நிதிச்சுமையாக அமைந்துள்ளது. 1.4.2007 அன்று மாநகராட்சிகளும், நகராட்சிகளும் அரசுக்கு செலுத்த வேண்டிய கடன் அசல் தொகை ரூ.430 கோடியாகும். அதே போல், அவைகள் செலுத்த வேண்டிய நிலுவை வட்டித் தொகை ரூ.369 கோடியாகும். நகராட்சி அமைப்புகள் அரசுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ஒவ்வொரு ஆண்டும் இந்த அமைப்புகளுக்கு அரசு வழங்கும் பகிர்வு நிதித் தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது. பல நகராட்சிகளில் இவ்விதம் பிடிப்பதற்கு கூட நிதி ஆதாரங்கள் இன்றி இருந்து வரும் நிலை உள்ளது. உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பது குறித்து பரிசீலிக்க அமைக்கப்பட்டுள்ள

உயர்நிலைக் குழுவால் இதுபற்றி விரிவாக விவாதிக்கப்பட்டது. உள்ளாட்சித் தலைவர்களின் கருத்தரங்களிலும் கடன் நிவாரணம் ஒரு முக்கிய கோரிக்கையாக பலரால் வலியுறுத்தப்பட்டது. மேலும், நகர் மன்றத் தலைவர்களின் பேரவையும் இக்கோரிக்கையை வலியுறுத்தியுள்ளது. மூன்றாம் மாநில நிதி ஆணையமும் மாநகராட்சி மற்றும் நகராட்சிகளுக்கு விதிக்கப்படும் வட்டி விகிதத்தை குறைத்திட பரிந்துரை செய்துள்ளது. இப்பொருள் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாநகராட்சிகளும், நகராட்சிகளும் கடன் சுமையிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்றும், இதற்கு வட்டி விகிதத்தில் மட்டும் குறைத்து சலுகை வழங்குவது போதாது என்றும், மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் உள்ள கடினமான நிதி நிலைமைகளை கருத்தில் கொண்டு, மாநகராட்சி மற்றும் நகராட்சிகள் அரசுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையான அசல் ரூ.430 கோடி மற்றும் வட்டி ரூ.363 கோடி ஆக மொத்தம் ரூ.793 கோடியையும் தள்ளுபடி செய்யலாம் என்று முடிவெடுத்துள்ளார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த முழுக் கடன் தள்ளுபடி மாநகராட்சி மற்றும் நகராட்சிகளின் நிதிநிலை சீரடைய பெரிதும் உதவும் என்றும் நம்புகிறேன். மேலும் இதனால் மேம்படும் நிதிஆதாரங்களைக் கொண்டு, தரமான சாலைகள், குடிநீர் வடிகால் வசதிகள் போன்ற அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை செம்மையாக செய்து இக்கடன் நிவாரணத்தின் பயன் பொதுமக்களை எட்ட மாநகராட்சிகளும், நகராட்சிகளும் உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்றும் நம்புகிறேன்."

2. மேற்காணும் பொருள் குறித்து பார்வையில் படிக்கப்பட்ட கடிதத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் ஒரு விரிவான அறிக்கையை அரசுக்கு அனுப்பியுள்ளார். அதில் ஒவ்வொரு மாநகராட்சி மற்றும் நகராட்சிக்கும் 31.3.2007 அன்று நிலுவையாக உள்ள அரசு கடன் அசல் தொகை மற்றும் வட்டித் தொகை ஆகியவற்றின் விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்பு 31.3.2007 அன்று நிலுவையாக இருந்த அரசு கடன் அசல் தொகை ரூ.430 கோடி என்றும், வட்டித் தொகை ரூ.363 கோடி என்றும், மொத்தத்தில் ரூ.793 கோடி என தெரிவிக்கப்பட்டிருந்தது என்றும் தற்போது மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டின் அடிப்படையில் கடன் நிலுவை அசல் தொகை ரூ.429.84 கோடி, வட்டித் தொகை ரூ.357.58 கோடி ஆகமொத்தம் ரூ.787.42 கோடி என கணக்கிடப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

3. நகராட்சி நிர்வாக ஆணையரின் கருத்துருவை அரசு கவனமாக பரிசீலித்து 102 நகராட்சிகளுக்கும் மற்றும் 5 மாநகராட்சிகளுக்கும் 31.3.2007 அன்று நிலுவையாக உள்ள அரசுக்கடன் அசல் தொகை மற்றும் வட்டித் தொகை ஆகியவற்றை முழுமையாக தள்ளுபடி செய்து அரசு இவண் ஆணையிடுகிறது.

4. இவ்வாணையின் நகலினை சம்பந்தப்பட்ட மாநகராட்சி மற்றும் நகராட்சி ஆணையர்களுக்கு அனுப்புமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.குஎண்.194/JS(P)/07, நாள் 8.11.2007 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. தீனபந்து,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5.
இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை, சென்னை-108.
மாநில கணக்காயர், சென்னை-18.
மாநில கணக்காயர், சென்னை-35.
உள்துறை தணிக்கை அலுவலர், சென்னை-9.
நிதித்துறை, சென்னை-9.
அனைத்து நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் (நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5ன் வழியாக).
மாண்புமிகு முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
மாண்புமிகு ஊரகவளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
மாண்புமிகு நிதியமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

12/11/07
பிரிவு அலுவலர்